# NIKE, Inc. நன்னடத்தை கோட்பாடுகள்

இறுதி எல்லை என ஒன்றில்லையென்றாலும் தொடக்கம் என்பது ஒன்று உண்டு என்பதை Nike இல் நாங்கள் மிகவும் நம்புகிறோம்.

நம்முடைய ஒப்பந்த தொழிலகங்களுடனான வேலைகள் படிப்படியாக வளர்ந்துவருவதைப் புரிந்துகொண்டு, நம் தொழிற்சாலை விநியோகஸ்தர்களிடம் நம் எதிர்பார்ப்புகளை தெளிவுபடுத்தவும், அதிகரிக்கவும், மேலும் ஒவ்வொரு தொழிற்சாலையும் பூர்த்திசெய்ய வேண்டிய குறைந்தபட்ச தரநிலைகளை வடிவமைக்கவும் இந்த நன்னடத்தை கோட்பாடு பயன்படுகிறது.

Nike inc. வள ஆதார வியூகங்களை நாம் எப்படி அணுகுகிறோம், நம்முடைய தொழிற்சாலையின் செயல்திறனை எப்படி மதிப்பிடுகிறோம், மற்றும் எந்த தொழிற்சாலைகளுடன் Nike ஒன்றிணைந்து செயல்பட்டு நம் வர்த்தகத்தை வளர்க்கும் என்பதை முடிவு செய்தல் ஆகியவற்றின் ஒன்றிணைந்த ஆக்கக்கூறாக இந்த தரநிலைகளைப் பயன்படுத்தவதே நம் நோக்கமாகும்.

வளஆதாரத் தேடல் மற்றும் உற்பத்தி ஆகியவற்றில் நம்முடைய வர்த்தக மாதிரியை நாம் படிபடியாக உருவாக்கும் அதே நேரத்தில், தலைமைப்பண்பு, தொடர்ச்சியான மேம்பாடு மற்றும் சுய நிர்வாகம் போன்றவை படிப்படியாக உருவாவதற்கு முக்கியமான அடிப்படை நிலை இந்த குறைந்தபட்ச தரநிலைகளைப் பூர்த்தி செய்வதே என்பதை புரிந்து கொள்ளுகிற தொழிற்சாலைகளோடு இணைந்து பணிபுரிய நாம் எண்ணுகிறோம்.

கோட்பாடுகளைத் தாண்டி, சிக்கனமான, பசுமை சார்ந்த, அதிக ஆற்றல்மிக்க மற்றும் நியாயமான விநியோக சங்கிலியை உருவாக்குவதில் உதவ நம்முடைய ஒப்பந்த தொழிற்சாலைகளோடு ஒன்றிணைந்து செயல்பட Nike ஈடுபட்டுள்ளது. நாம் செயல்படும் நாடுகளில் பணி மற்றும் சுற்றுச்சூழல் நிலைகளில் அமைப்பு மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு பொதுசமூகம், அரசாங்கங்கள் மற்றும் தனியார் துறை ஆகியவற்றோடு நாம் தொடர்ந்து ஒன்றிணைந்து செயல்படுவோம்.

வீண் அம்சங்கள் குறைத்தல், வளஆதாரங்களை பொறுப்புடன் பயன்படுத்துதல், பணியாளர்களின் உரிமைகளை ஆதரித்தல் மற்றும் பணியாளர்கள் மற்றும் சமூகத்தை மேம்படுத்துதல் போன்ற இலக்குகளுக்கான Nike இன் பொறுப்புகளை ஒப்பந்த தொழிற்சாலைகள் பகிர்ந்துகொள்ளும் என நாம் எதிர்பார்க்கிறோம். ஒளிவுமறைவின்மை, கூட்டுசெயல்பாடு மற்றும் பரஸ்பர மரியாதை ஆகியவை அடிப்படையிலான கூட்டுவணிகம் இதை சாத்தியமாக்கும் என நாம் நம்புகிறோம்.

இந்த நன்னடத்தை கோட்பாடுகள், நம்முடைய ஒப்பந்த தொழிற்சாலைகளை கீழே குறிப்பிட்ட குறைந்தபட்ச தரநிலை இலக்குகளைப் பின்பற்றுவதற்கு கடைமைப்படுத்துகிறது.

## தன்னார்வத்தினலான பணி

ஒப்பந்த்தாரர், அடமானப் பணியாளர்கள், அடைத்துவைக்கப்பட்ட பணியாளர்கள் அல்லது பிற வடிவங்களிலான கட்டாயப்படுத்தப்பட்ட பணியாளர்களை ஒப்பந்ததாரர் பயன்படுத்தக்கூடாது. பணிசேர்ப்பு கட்டணம் உள்ளிட்ட வெளிநாட்டு பணியாளர்களுக்கான பணித் தகுதி கட்டணத்துக்கு ஒப்பந்ததாரரே பொறுப்பு.

## ஊழியர்கள் 16 வயது அல்லது அதைவிடப் வயதானவராக இருத்தல்

ஒப்பந்ததாரர்களின் ஊழியர்கள் குறைந்தது 16 வயது அல்லது கட்டாய கல்வியை நிறைவு செய்ய வேண்டிய வயதைவிட அதிகமான அல்லது நாட்டின் சட்டபூர்வ வேலை செய்யும் வயது இதில் எது அதிகமோ அதைக் கொண்டிருக்கவேண்டும். 18 வயதுக்கு கீழுள்ள ஊழியர்கள் அபாயமான சூழ்நிலைப் பணிகளில் ஈடுபடுத்தப்படாமல் இருத்தல்வேண்டும்.

## ஒப்பந்ததாரர் ஊழியர்களை வேறுபடுத்திபார்க்காமல் இருத்தல்

வேலைக்கு எடுத்தல், ஊதியம், பதவி உயர்வு அல்லது ஒழுக்கம் ஆகியவை உள்ளிட்ட பணிசார்ந்த விஷயங்களில் பாலினம், இனம், மதம், வயது, இயலாமை, பாலினம் சார்ந்த ஈடுபாடு, கர்ப்பம், திருமண நிலை, தேசிய இனம், அரசியல் கருத்து, சமூக அல்லது மனித இனம் அல்லது தேசிய சட்டத்தால் பாதுகாக்கப்பட்ட வேறு எந்த நிலையின் அடிப்படையிலும் ஒப்பந்ததாரர்கள் ஊழியர்களை வேறுபடுத்திப் பார்க்ககூடாது.

## சங்கம் மற்றும் கூட்டு பேச்சுவார்த்தையை மதித்தல்

உற்பத்தி செய்யப்படுகிற நாட்டின் சட்டம் அனுமதிக்கிற அளவுக்கு, சங்கம் அமைத்தல் மற்றும் கூட்டுப் பேச்சுவார்த்தை ஆகியவற்றில் ஒப்பந்ததாரர் ஊழியர்களின் உரிமைகளை அறிந்துகொண்டு மதிக்கவேண்டும். துன்புறுத்தல், குறுக்கீடு அல்லது தாக்குதல் எதுவுமின்றி அவர்கள் தங்கள் விருப்பப்படி வர்த்தக சங்கம் மற்றும் பிற ஊழியர் அமைப்புகள் ஆகியவற்றை உருவாக்க அல்லது சேர்வதற்கான உரிமையும் இதில் அடங்கும்.

## சரியான நேரத்தில் ஊதியம் அளிக்கப்படுதல்

ஒப்பந்ததாரரின் ஊழியர்களுக்கு சரியான நேரத்தில் அந்த நாட்டின் சட்டபூர்வமான குறைந்தபட்ச சம்பளமாவது வழங்கப்படவேண்டும், மேலும் விடுமுறைகள் மற்றும் பணிக்காலம் முடியும்போது சட்டப்படியான விடுவிப்பு உள்ளிட்ட சட்டபூர்வமான நலன்களையும் அளிக்கவேண்டும். ஒழுக்கமின்மைக்காக தொழிலாளர்களின் ஊதியம் குறைக்கப்படமாட்டாது.

## துன்புறுத்தல் மற்றும் பழிகூறுதல் பொறுத்துக் கொள்ளப்படுவதில்லை

ஒப்பந்ததாரரின் ஊழியர்கள் மதிப்புடனும் மரியாதையுடனும் நடத்தப்படவேண்டும். உடல்ரீதியான, பாலியல்ரீதியான, உளரீதியான அல்லது சொல்ரீதியான துன்புறுத்தல் அல்லது பழிகூறுதலுக்கு ஊழியர்கள் உட்படுத்தப்படமாட்டார்கள்.

## பணிநேரங்கள் அதிகமாக இல்லை

ஒப்பந்ததாரரின் ஊழியர்கள் வாரத்துக்கு 60 மணி நேரம் அல்லது உற்பத்தி செய்யப்படும் நாட்டின் சட்டம் அனுமதிக்கப்பட்ட வழக்கமான மற்றும் மிகைநேரம் இவை இரண்டில் எது குறைவோ அதற்கு மிகையாக வேலை செய்யக்கூடாது. கூடுதல் பணிநேரங்கள் தொழிலாளர்களின் சம்மதத்துடன் இருக்கவேண்டும். கூடுதல் பணிநேரங்கள் ஏதாவது இருந்தால், அவை சட்டபூர்வமாகத் தேவைப்படும் சம்பள விகிதத்தில் ஈடுசெய்யப்படவேண்டும். ஒவ்வொரு ஏழு நாட்கள் காலத்தில் குறைந்தது தொடர்ச்சியாக 24 மணி நேர ஓய்வு ஊழியர்களுக்கு அளிக்கப்படவேண்டும்.

## தொடர்ந்து பணி அளிக்கப்பட வேண்டும்

நாட்டின் சட்டம் மற்றும் நடைமுறை மூலம் நிறுவப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட பணி உறவுகள் அடிப்படையில் வேலை செய்யப்படுகிறது. Nike அடையாள முத்திரை அல்லது அதன் கூட்டுத்தயாரிப்புகளின் உற்பத்திக்கு ஒப்பந்ததாரர் எந்த வடிவிலான வீட்டுவேலை ஏற்பாடுகளையும் பயன்படுத்தக்கூடாது.

## பணியிடப் பாதுகாப்பு மற்றும் உடல்நலம்

ஒப்பந்ததாரர் பாதுகாப்பான, சுகாதாரமான மற்றும் ஆரோக்கியமான பணியிட அமைப்பை அளிக்கவேண்டும் மேலும் வேலையின்போது அல்லது ஒப்பந்ததாரரின் தொழிற்சாலை செயல்பாட்டின் விளைவாக ஏற்படும் விபத்துக்கள் அல்லது காயங்களைத் தடுக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். அனைத்து ஊழியர்களின் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியத்துக்கு ஏற்படும் சாத்தியமான அபாயங்களைக் கண்டுபிடிக்க, தவிர்க்க அல்லது எதிர்வினையாற்ற ஒப்பந்ததாரர் அமைப்புகளைக் கொண்டிருக்கவேண்டும்.

## சுற்றுச்சூழல் தாக்கம் குறைக்கப்படுகிறது

காற்று வெளியீடுகள், திட/அபாயகரமான வீண் அம்சங்கள் மற்றும் நீர்க்கழிவுகள் ஆகியவற்றை ஒழுங்குபடுத்துவதற்குப் பொருத்தமான தேவைகளை பூர்த்திசெய்வதன் மூலம் மனித ஆரோக்கியம் மற்றும் சுற்றுச்சூழலை ஒப்பந்ததாரர் பாதுகாக்கவேண்டும். சுற்றுச்சூழல் மீதான எதிர்மறை செயல் தாக்கத்தைக் குறைப்பதற்கு உகந்த சரியான நடவடிக்கைகளை ஒப்பந்ததாரர் மேற்கொள்ளவேண்டும், மேலும் சுற்றுச்சூழல் செயல்திறனை மேம்படுத்த தொடர்ச்சியாக கடுமையாய் உழைக்கவேண்டும்.

## கோட்பாடுகள் முழுமையாக நடைமுறைப்படுத்துதல்

Nike உடன் வர்த்தகம் செய்வதற்கு நிபந்தனையாக, Nike இன் தலைமைத் தரநிலைகள் கோட்பாட்டில் விளக்கியுள்ளதுபோல இந்த கோட்பாடு தரநிலைகள் மற்றும் பொருத்தமான சட்டங்களை அதனுடைய வர்த்தக செயல்முறைகளில் நடைமுறைப்படுத்தவும் ஒன்றிணைக்கவும், மேலும் சரிபார்ப்பதற்கு மற்றும் கண்காணிப்பதற்கும் ஒப்பந்ததாரர் சமர்ப்பிக்க வேண்டும். அனைத்து முக்கியமான பணியிடங்களிலும் ஊழியர்களின் மொழிகளில் ஒப்பந்ததாரர் இந்த கோட்பாடுகளை வெளியிடவேண்டும்; இந்த கோட்பாடு மற்றும் பொருத்தமான தேசிய சட்டங்களில் வரையறுக்கப்பட்டபடி அவர்களின் உரிமைகள் மற்றும் உதவிகள் பற்றி ஊழியர்களுக்கு பயிற்சி அளிக்கவேண்டும்; மேலும் Nike அடையாள முத்திரை அல்லது Nike இன் இணைத் தயாரிப்புகளை உற்பத்தி செய்யும் எந்த ஒரு துணை-ஒப்பந்ததாரரும் இவற்றுக்கு இணங்கியிருப்பதை உறுதிசெய்யவேண்டும்.